ஆண்டு சந்தா ரூ. 7. தனிப் பிரதி அணு 2. சிலோன் 15 சதம் REGD. NO 4642.

# திராவிடநாடு

மலர் 11. 2—11—52 இதழ் 18

[கனவில் கண்டது]

## தேவலோகத்தில் ஒரு நாள்

-[அண்ணால்]-

### காட்சி 1

இடம்: தேவலோகம்

[காமதேனு 'கனஜோராக' அசைபோட்டுக் கொண்டிருக்கிறது. அதை, வைத்த கண் வாங்காது பார்த்துக்கொண்டிருக்கும் 'நந்தி'யைச் சுட்டிக் காட்டுகிறார், கம்பர்—எதிரே வரும் சுந்திரமூர்த்தி நாயனுருக்கு. 'காமதேனு—நந்தி' காதலைக் கண்டு சுந்திரர் சிரிக்கிறார். கம்பர் அமர்ந்திருப்பது கர்ப்பகவிருட்சத்தின் நிழலில். சுந்தரர், கம்பரின் விரக்தியான நிலையைக் கண்டு பேசுகிறார்]

சுந்தரர்:- கவலையேன் கம்பரே! கர்ப்பகத்தரு, கேட்டதை வழங்கும் விருட்சமல்லவா? வேதனையேன்—வெட்கத்தைவிட்டுக் கேளும்! 'கர்ப்பகத் தருவே—தனிமையைக் கழிக்க கன்னியொன்று தா!' என்று கேளும்!!

கம்பர்:- சுந்தரரே! என்ன சொல்கிறீர். கனியா? கன்னியா?

சு:- இரண்டும் ருசிக்கத்தானே! உமது அகராதிப்படி கனிதானே கன்னி. கன்னிதானே கனி.

க:- கேலி போதும் சுந்தரரே!

சு:- உண்மையைச் சொன்னால் உடம்பெரிச்சல்தான உண்டாகும். ஆசைத் தீயால் உள்ளத்தைக் கருக்கிக் கொள்ளாதீர். கேளும் வேண்டியதை. கேட்டதை வழங்கும் கர்ப்பக விருட்சமய்யா, இது!

க:- கர்ப்பகத்தருவிடம் கன்னி கேட்கச் சொல்கிறீர். நன்று நன்று உமது யோசனை! நாளையதினம் நண்பர்களின் கேலிக்கு யார் ஆளாவது? எம்பெருமான் ஸ்ரீராமச்சந்திரருக்கு எட்டினால் என்ன நினைப்பார்?

சு:- ஒன்றும் நினைக்கமாட்டார். பக்தன், பரம சந்தோஷமாகயிருக்கிறான் என்பதைக் கண்டு மகிழத்தான் செய்வார். பக்தர்களின் க்ஷேமசுகம்தானே பகவானுக்குக் களிப்பூட்டும். என்னைப் பாரும். எனக்காக......

க:- பரமசிவமே ஓடி வந்தார். பரவையிடம் அழைத்துச் சென்றார். விரகதாபம் தணிக்க வேண்டியதைச் செய்தார்...

சு:- என்ன இருந்தாலும் என்னப்பன், ஈசுவரன் குணமே குணம் தான்! ஈசா...பரமேசா...கைலாயபதி...சங்கரா...சங்கரா.

[சுந்தரர் இவ்விதம் உச்சரிக்கும் இதே நேரத்தில், 'ராம ராம' என்று யாரோ சப்தம் போடுவது கேட்கவே, கம்பரும் சுந்தரரும் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, மரத்தை அண்ணாந்து பார்க்கின்றனர். அனுமார், சுக்ரீவன் தலையில் 'பேன்' பார்க்கும் 'போலிக' காட்சி தருகிறார்—'ராம ராம' என்று சொல்லிய வண்ணம்)

க:- ஆஞ்சநேயா! எத்தனை தடவைச் சொல்லியிருக்கிறேன். இவ்விதம், நான் போகுமிடத்துக்கெல்லாம வராதே ஒட்டுக் கேட்காதே என்று. வம்பு செய்பலாமோ, வாயு புத்திரா!

சுந்:- குரங்கிடம் கொஞ்சுகிறீரே! சுயபுத்தி போகுமா?

['குரங்கு' என்று சுந்தரர் அழுத்திச் சொல்லி, ஏளனம் செய்வதைக் கேட்டதும கம்பருக்கே கோபம் வருகிறது]

கம்:- சுந்தரரே—'குரங்கு' என்று சொல்லாதேயும்...எனக்குக் கோபம் வரும்!

சு:- வரட்டுமே யாருக்கென்ன? அனுமன், குரங்கில்லாமல் தேவகணமா? இல்லை உம்மைப் போல என்னைப் போல மனித இனமா?

கம்:- நம்மைப் போலில்லை யென்றாலும், அனுமார், ஆழ்வார். சிரஞ்சீவித் தன்மை பெற்றவர். ஸ்ரீராமச் சந்திர மூர்த்தியின் அன்புக்குப் பாத்திரமானவர். அவரை இவ்விதமெல்லாம், பேசாதீர்!

சுந்:- அனுமாரை என்னய்யா—உமது ராமனையே நான் சொல்லுவேன், தெரியாதோ யோக்யதை? ஊரார் பேச்சைக்கேட்டுக்கொண்டு, கைபிடித்தவளை கானகத்தில் கொண்டுவிட்ட ஆசாமிதானே!

கம்:- சுந்தரரே—இனிப் பொறுக்கமாட்டேன். எம்பிரானைத் தூஷிக்கும் உம்மைச் சும்மாவிட மாட்டேன்.

சுந்:- எழுத்தாணியை எடுத்துக் குத்திவிடுவீரோ?

கம்:- குதர்க்கம் பேசாதீர்! உமது சிவபிரான் செய்த திருவிளையாடல்கள் யாவும் நான் அறிவேன். ஆபாசம், வெளியே சொன்னால்...

சுந்:- ஓய்! பொன்னுக்குப் பாடி! வாயை மூடும்.

கம்:- ஏய்! பெண்ணுக்கு ஆடி! என்ன நினைத்தாய், என்னை.

[இருவரும் கைகலக்கும் நிலைக்கு வந்துவிட்டார்கள், அனுமாரும் சுக்ரீவனும் மரக்கிளைகளில் கோபாவேசத்தோடு தாவுகிறார்கள். கம்பரைத் தாக்கும் சுந்தரர் மீது அவைகளுக்குஆத்திரம் அவர்களது அடிபிடிச் சண்டையை தூரத்தில் வரும் வள்ளுவரும், இளங்கோவும் காணவே, விரைகிறார்கள். தடுக்கிறார்கள்].

இளங்கோ:- என்ன இது, கம்பரே! வெட்கமில்லையா, சுந்தரரே! இதென்ன வேடிக்கை? விலகுங்கள்.

திருவள்ளுவர்:- அன்பும் அமைதியும வேண்டாமோ? வீண் சண்டை போடுகிறீர்களே!

கம்:- நீங்களே கேளுங்கள்—இவர் எம்பெருமான் ராமச்சந்திர மூர்த்தியை எள்ளி நகையாடுகிறார்!

சுந்:- கம்பர் மட்டும் கைலாயபதியை ஆபாசமானவர் என்கலாமோ?

இளங்:- போதும்! போதும்!! நிறுத்துங்கள். [illegible] வாருங்கள், திருச்சபைக்கு

கம்பர், சுந்தரர்:- திருச்சபை கூடுகிறதா? என்ன விசேஷம்?

இள:- பூலோகப் பிரச்னைகளாம்.

சுந்:- பூலோகப் பிரச்னைகளுக்கும் தேவலோகத்துக்கும் என்ன சம்பந்தம்?

கம்:- ஏதோ, புதுமையிருக்கிறது. போகலாம்! வாருங்கள்!!

### காட்சி 2

திருச்சபை

[ஊர்வசியின் நடனம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தர்பார் ஆசனத்தின் மீது மும்மூர்த்திகளாம் பரமசிவம், மகாவிஷ்ணு, பிரம்மதேவன் ஆகியோர் அமர்ந்திருக்கிறார்கள். அதற்கு அடுத்தபடி போடப்பட்டிருக்கும் ஆசனங்களில் அக்கினி, வருணன், வாயு முதலியோர் உட்கார்ந்திருக்கிறார்கள். சற்று தூரத்தில் தனி ஆசனங்களில் நாரதரும், பூமிதேவியும் இருக்கிறார்கள்.]

பரமசிவம்:-சபையோரே! நீண்ட நாட்களுக்குப் பிறகு, திருச்சபை கூடியிருக்கிறது. நாரதன் வழக்கம் போல, கொண்டுவந்திருக்கும் ஒரு முக்கிய விஷயத்தைக் குறித்து நாம் விவாதிக்கவேண்டும். நாரதனைப் போலவே, பூமாதேவியும், ஒரு மகஜர் சமர்ப்பித்துள்ளாள். முக்கியமான மகஜர் அது. அதையும் ஆலோசிக்கவேண்டும். அதனால் தான் எல்லோரும், இங்கே தவறாது வருமாறு செய்தி அனுப்பினேன். முதலில்...நாரதா! உனது பூலோகப் பிரச்னைகளைச் சாங்கோபாங்கமாய், எடுத்துக் கூறு சபையில்!

[ஒரு ஓரத்தில் சபை நடவடிக்கைகளைக் கண்டு கொண்டிருக்கும் திருவள்ளுவர், இளங்கோவைக கேட்கிறார். "அண்டசராசரமும் அகக்கண்ணால் அறியும் ஆற்றல் பெற்றவர்கள் என்று தேவலோகத்தாரைக் குறித்து கூறியிருக்கிறார்களே. ஆண்டவன், இப்போது பூலோகம் பற்றி நாரதனை ஏன் கேட்கிறார்?"—வள்ளுவர் கேள்விக்குப் பதில்கூற வாயைத்திறக்கிறார் இளங்கோ. பக்கத்திலேயிருக்கும் வசிஷ்டர், விசுவாமித்திரர் ஆகியோரிடமிருந்து 'உஸ்! உஸ்!' என்று சப்தம் வரவே, அமைதியாகயிருந்துவிடுகிறார். நாரதர்எழுந்துநிற்கிறார். தம்புருவை மீட்டுகிறார். ஒரு முறை சபை முழுவதையும் ஏறெடுத்துப் பார்த்துவிட்டு...]

நாரதர்:- உமாபதே! ஒரு ஒழுங்குப் பிரச்னை...

பரமசிவன்:- என்ன அது?

நார:- ஒழுங்குப் பிரச்னை!

பரம:- ஒழுங்குப் பிரச்னையா! தேவலோகத்துத் திருச்சபையிலா? என்ன நாரதரே, புதிர் போடுகிறீர்?

நார:- புதிரல்ல. மக்களைக் காக்கும் மகா சபைகள் கூடும்போது மந்திரிமார்கள் அனைவரும் சபையிலிருக்க வேண்டும் என்பது பூலோக முறை......

பரம:- மந்திரிகளா?

நார:- ஆம், பிரபோ! முதலமைச்சரும் போரமைச்சருமாகிய தாங்கள், உள்நாட்டிலாகா மந்திரி மகாவிஷ்ணு, ஆக்கவேலை அமைச்சர் பிரம்மதேவன், நீர்ப்பாசன அமைச்சர் வருணன், சுகாதார அமைச்சர் வாயு, டெபுடி மந்திரிகளான சூரியன், சந்திரன், அக்கினி அத்தனைபேரும் சபையில் இருக்கிறீர்கள்! ஆனால, முக்கிய அமைச்சர்கள் இருவரைக் காணவில்லை. நான் கூறப் போகும் விஷயத்துக்கும், அவர்களுக்கும் நிறைய சம்பந்தம் உண்டு. எங்கே அவர்கள்? முக்கியமான விஷயம்பற்றி விவாதிக்க நாம் கூடியிருக்கிறோம். ஆனால், அந்த அமைச்சர்கள் சபையிலே இல்லை. இதை நான் பலமாகக் கண்டிக்கிறேன். முதலமைச்சராகிய தாங்கள் தலையிட்டு, அவ்விருவரையும் சபைக்கு அழைக்கும்வரையில் நான் விஷயத்தைத் துவக்கப் போவதில்லை. ஆமாம்! முடியாது!!

[பரமசிவன், சுற்று முற்றும் பார்க்கிறார். விஷயம் ஒன்றும் விளங்கவில்லை]

பரம:- நாரதரே! அந்த இரு அமைச்சர்களும் யார்?

நார:- யாரா? நன்றாக இருக்கிறது, ராஜசபையின் லட்சணம்! கல்வி அமைச்சர் சரஸ்வதி, ஒருவர். மற்றொருவர் நிதி அமைச்சர் இலட்சுமி.

[பரமசிவன்—'எங்கே இலட்சுமி?' எனும் பாவனையில் மகாவிஷ்ணுவைப் பார்க்கிறார்.]

(6-ம் பக்கம் பார்க்க)

### கழக உறுப்பினராதல்

தி. மு. கழகத்தில் உறுப்பினராகச்சேர விரும்புவோர் தனித்தும், பலராகச்சேர்ந்தும் தங்கள் பெயர், முகவரி, தொழில், வயது ஆகியவற்றை ஒவ்வொருவருக்கும் உரிய சந்தாதொகை எட்டு அணுவோடு சேர்த்துத் தலைமை நிலையத்திற்கு அனுப்பிவைத்தால், தலைமை நிலையத்திலிருந்து ரசீது போட்டு அனுப்பப்பட்டுக் கிளைக் கழகங்களுக்கு அறிவிக்கப்படும். உறுப்பினர் சேர்க்கும் புத்தகம் யாருக்கும் நேரே அனுப்புவதற்கில்லை.

அண்ணாதுரை,
பொதுச்செயலாளர்—
தலைமைக்கழகம்,
அறிவகம்
இராய்புரம்—சென்னை

திராவிடநாடு

காஞ்சி] 2—11—52 [ஞாயிறு

# ஆசிரியர் நிலை

★

"கையிலிருக்கும் ஐந்து விரல்களும் ஒரே விதமாகயிருக்க வேண்டும். ஒன்று வீங்கியும், மற்றொன்று சாதாரணமாகவும் இருக்கக்கூடாது. இது, கைக்கே ஆபத்து" என்று, காந்தியாரின் பிரதம சீடரான ஆச்சாரியார் வினோபாபவே அண்மையில், காங்கிரஸ் அரசாங்கத்தினருக்கு அறிவுறுத்தியிருக்கிறார். ஒருவருக்கு கொழுத்த சம்பளம்! இன்னொருவருக்கு ஏதோ'சம்பளம்!!—என்கிற வித்யாசம் காட்டப்படக் கூடாது என்பதே, அவருடைய, கூற்றாகும். இந்த எண்ணத்தை, நாம் அடிக்கடி, வலியுறுத்தி வருகிறோம். கொள்ளைச் சம்பளம் பெற்றுக்கொண்டு சிலரும், வாழ்வுக்கே போதாத அளவு சம்பளம் பெற்றுக்கொண்டு பலரும், இருக்கின்ற நிலைமை மாறவேண்டும் என்று நாம் வலியுறுத்துவது போலவே, தேசியப் போராட்டத்தின்போது காங்கிரஸ் இபக்கமும் போராடி வந்ததுண்டு. ஆனால், இன்று! அரசு பீடம் ஏறியும், வெள்ளையன் சக்கரம் தான் சுற்றுகிறது. அமைச்சர்களும், துணை அமைச்சர்களும், தூதுவர்களுமாக நாட்டின் வரிப்பணத்தைப் பங்கு போட்டுக் கொளகிறார்கள். இதனால், உழைத்துவாழும், உத்தமர்கள் உலர வேண்டியவர்களாகிறார்கள்! இவ்விதம் உலரும் பலவகையினரில், பள்ளி ஆசிரியர்களின் நிலை மிகமிகக் கூர்ந்து கவனிக்கப்பட வேண்டியதாகும். சமுதாயத்தின் ஏணிகள், இவர்கள்! ஆனால், சமுதாயத்தில் 'பொதி' சுமப்போர்போல, வாழ்க்கையைத்தள்ளிவருகிறார்கள். ஆரம்ப ஆசிரியர்கள், உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் ஆகிய எவருடைய நிலையும், பரிதாபத்துக்குரியதாகவே இருக்கிறது. வாழ்க்கைக்குப் போதுமான ஊதியம் கிடைப்பதில்லை! இதைப்பற்றி, அவர்கள், அடிக்கடி கோரிக்கைகள் விடுத்தாலும், ஆட்சியாளர் செவிடுபோலாகின்றனர். டில்லியின் தொடர்பில் வேலைபார்க்கும் தபால் சிப்பந்தி பெறும் சம்பளம் கூட ஆசிரியர்களுக்கு இல்லை! என்ன வேடிக்கை பாருங்கள்?

அண்மையில் சீனு சென்று வந்த பேராசிரியர் ஒருவர், அங்கு ஆசிரியர்கள் அனுபவிக்கும் வாழ்க்கைவசதிகளைப்பற்றிப் பெருமிதமாகக் குறிப்பிட்டுள்ளார்.

சீனுவில் என்று மட்டுமல்ல. பொதுவாகவே, இங்குதவிர மற்றெல்லாவிடங்களிலும் ஆசிரியர்கள் நிலை,கவுரமாகவேயிருக்கிறது இங்குதான், அவதி! பட்டினி! தாழ்ந்த நிலை!—எல்லாம்.

இந்தக்குறைகளைப் போக்குவதில், ஆளவந்தார் கவனம் செலுத்த வேண்டும். அவர்கள், சமூகத்தின், தூண்கள்! எவ்வளவோ வழிகளில பணத்தை விரயம் செய்வதைத் தகர்த்து, குழிவிழுந்த கண்களோடு உலவும் ஆசிரியர்களுக்கு உதவினல், சமுதாய மரம்—செழிப்பாக வளரும். எதிர்காலம் இன்பமாக, வழி பிறக்கும். செய்வார்களா, ஆட்சியாளர்?

❁

## பெருந்தகை மறைவு!

செந்தாமரைகளைப் பூக்கவைக்கும் செங்கதிரோன் போன்று, விருதுநகரில் கல்லூரியொன்று ஏற்பட காரணமாகயிருந்த பெருந்தகையாளர் விருதுநகர் எம். எஸ். பீ. செந்திக்குமார் அவர்கள், நம்மிடமிருந்து பிரிக்கப்பட்டார் எனும் செய்தியினைக் கேட்டதும், மிகமிக வருந்தினோம். 23—10—52 மாலை தனது 72-வது வயதில், செந்திக்குமார் அவர்களின் மூச்சு அடங்கிவிட்டது மறைந்த பெருந்தகை, மறையாத பல சின்னங்களை அறிவுலகுக்குத் தந்தவர். கோயில் குடமுழுக்கு விழாக்களுக்கும், தங்கக் கலசம் வைப்பதற்கும், ததியோதன ஆராதனைக்கும் அள்ளி அள்ளி வழங்கும் செல்வந்தர்கள் குவிந்து கிடக்கும் இங்கே, அறிவுமலர்களை மணக்கவைக்கும் பணியில் ஈடுபடுவோர் மிகமிகச்சிலரே. அந்தச் சிலரில், 'செங்கதிரோன்' போன்று, விருதுநகரில், ஒளி வீசினர் திருவாளர் செந்திக்குமார். அவரது மறைவு, கேட்டு நாம் கலங்கியது போலவே நாடும் கலங்கியிருக்கும். தோழர் செந்திக்குமார் அவர்கள், திராவிடரியக்கத்தின் முன்னுள் தளகர்த்தர்களில் ஒருவருமாவார். 72-வயதுக்குள் 'தன்னை' இந்த நாட்டின் ஏட்டில், பொறித்துக் கொண்டுவிட்ட பெருந்தகையாளரை, நாம் இழந்து விட்டோம். நமது நண்பரும் விருதுநகர் நகரசபைத்தலைவரும், மறைந்த பெருந்தகையின் புதல்வருமான தோழர் எம். எஸ். பி. எஸ். பெரியசாமி அவர்களுக்கும் அவரது குடும்பத்தாருக்கும் நமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

★

# 'இருட்டில்' பிரகாசம்!

"அண்ணுதுரையின் நூல் வெளியீடுகள் அனைத்துக்கும் அரசாங்கம் தடைவிதிக்க வேண்டுமென்றும், அவற்றை இந்த நாட்டிற்குள் வர அனுமதிக்கக் கூடாதென்றும் வற்புறுத்துகிறேன்"

'யார் இந்த ஜார்?'—என்று கேட்பீர்கள்! சாதாரண ஆசாமிதான் இவ்விதம் வெளியிட்டிருக்கிறார். அதிகாரத் திமிரும், அடக்கியாளும் வெறியும், நிரம்பிய ஆதிக்கக்காரன் இத்தகைய வார்த்தைகளைச் சொன்னால், சிறிது சிந்திக்க வேண்டியது தான். ஆனால், இவ்விதம் 'வற்புறுத்துகிறவர்' அத்தகைய ஆசாமியல்ல! "அம்மையப்பா உந்தன் அடியில் சேர்த்துக்கொள்" என்று அனுதினமும் துதிக்கும் சைவமெய்யன்பர். இலங்கையைச் சேர்ந்த பருத்தித்துறையில் நடைபெற்ற சைவ ஊழியர் மாநாட்டில் இவ்விதம் பேசினராம். அவரது பேச்சை கேட்டு ஆத்திரமடைந்த பல தோழர்கள் நமக்குக் கடிதம்தீட்டிய வண்ணம் உள்ளனர். இதுபோன்ற 'சைவமெய்யன்பர்களை' நாம் 'மன்னித்து' விடுவது வழக்கம் — இது போதெல்லாம். ஆனால் தோழர்கள் செய்யும் தொல்லையின் காரணமாக, அவரை உங்களுக்கு அறிமுகம் செய்து வைக்கவேண்டியவனுகிறேன்- மேற்கண்ட தொனியில் திருவாய் மலர்ந்த மெய்யன்பர் பெயர் சிவப்பிரகாசம். தமிழ் கற்ற வித்துவானும். பெயர் பிரகாசம்! அதிலும் சிவப்பிரகாசம்!! — அத்தகைய அன்பரின் கருத்துக்கள், அறிவு ஒளியை வீசும் எனும் ஆர்வத்தோடு தோழர்கள் சென்றிருக்கிறார்கள்—'பிரகாசம்' இருட்டுக்கு அழைத்திருக்கிறது! எனவே, நமக்கு எழுதுகிறார்கள். உணர்ச்சிவசப்பட்டு, கோபமாகவும், கண்டித்தும் கடிதம் எழுதியிருக்கும் தோழர்களுக்கு ஒன்றுகூற விரும்புகிறேன். 'மெய்யன்பர்கள்'சிறுதலைக் குறித்து, வீண்விரோதம் கொள்ளாதீர்கள்! அவர்கள் இந்த நிலைக்கு வந்துவிட்டதற்காக அனுதாபங் காட்டுங்கள்!! அனுதினமும் பூஜிக்கும் ஆண்டவனை நோக்கி, "ஆபத்பாந்தவா! அனாதரட்சகா! இந்தஅக்கிரமக்காரனை அழித்துவிடு. மதநம்பிக்கையைக் குறைக்கிறான்" என்று வேண்டிக்கொள்வதைவிட்டு, ஆட்சியாளரிடம் மண்டியிடுகின்றனரே, இதுவே நமக்கோர் வெற்றிதான்! ஏனெனில் "சூலம் சுழலும் வாள், இருக்க, கட்டளையிட்டால் ஓடிவரும் பூதகணங்கள் இருக்க, நெற்றிக்கண்ணிருக்க, நினைத்தால் அழிக்கும் ஆற்றல் இருக்க" பரமசிவனை நம்பாமல், பாராள்வோரின் காலில் விழுமளவுக்கு வந்திருக்கிறார்கள் என்றால், அதில் பொதிந்திருக்கும் கருத்து—'அவர்களுக்கே ஆண்டவன்மீது நம்பிக்கையில்லை' என்பதுதான். நம்பிக்கையிருந்தால் நத்துவார்களா, சர்க்காரை! அவ்விதம் நாம்செய்யும் பணி கூடாதென்று 'எங்கும் நிறை ஞானஜோதி' கருதினல் நம்மை விட்டுத்தான் வைப்பாரா! 'எமனை அழைத்து, பாசக்கயிற்றால் சுயமரியாதைக்காரரையெல்லாம் சுருக்குப் போட்டுக்கொண்டுவா' என்று இத்தனை நாளில் நம்மை அழித்திருப்பாரே!!

ஆகவே, மெய்யன்பரின், 'வற்புறுத்தல்' கண்டு கோபங்கொள்ள வேண்டாமெனத் தோழர்களைக் கேட்டுக்கொள்கிறோம். ஏனெனில், மெய்யன்பர் பிரகாசம், அண்ணுதுரையின் நூல்களைத் தடுக்கவேண்டுமென்று, வலியுறுத்திப் பேசியதாக "தினகரன்" இதழில் வந்துள்ள பகுதிகளைப் பார்க்கும்போது மெய்யன்பர் குழாத்தின்மீது நமக்கு மிக மிகப் பரிதாபம் வருகிறது. அவர் கூறினராம். "பிரதானமாக அண்ணுதுரை எனும் தென் இந்திய எழுத்தாளரின் வெளியீடுகளைக் குறிப்பிட விரும்புகிறேன்............நாட்டின் இளைஞர்களை மயக்கிச் சொக்கச் செய்யும் சில விஷயங்களை அளித்து வருகிறார்......பண்டைக்கால முனிபுங்கவர்களால் ஆக்கப்பெற்றவேதங்களும், ஆகமங்களும் இவரால் கண்டனஞ்செய்து நிந்திக்கப்பட்டுள்ளன" என்பதாக நீறுபூசி, நித்தியமாயும் சத்தியமாயும், நீக்கமற நிறைந்திருக்கும் நீலாயதாக்ஷி மணாளனை நேசிக்கும் திருத்தொண்டரின் முகாரி, நம்மைமகிழ்விக்கிறது! நமது எழுத்துக்கள் 'மயக்கிச்சொக்கச் செய்கிறதாம்!' 'பண்டைக்கால முனிபுங்கவர்களால் ஆக்கப்பெற்ற வேதங்கள், ஆகமங்கள்' ஆகியவைகளின் சக்தியை, நமது கருத்துக்கள், துளைத்துவிடுகிறதாம்! சொல்லுகிறார் மெய்யன்பர்!! எத்தகைய வெற்றி இது.

அஷ்டமாசித்திகளும் கைவரப் பெற்றவர்கள், ஆண்டவனை அனுதினமும் சந்திப்பவர்கள் என்றெல்லாம் மெய்யன்பர்களால் போற்றப்படும், முனிபுங்கவர்களின் ஏற்பாடுகளை மிக மிகச் சாமான்யரான நமது கருத்துக்கள், துளைத்துவிடுகின்றதென்றால் என்ன அர்த்தம்? ஒன்று, அவை, ஓட்டை உடைசல் நிறைந்தவையாயிருக்க வேண்டும்! அல்லது கவைக்குதவாதவைஎன்று 'கடவுளாலேயே' வெறுக்கப்பட வேண்டும்!!

ஆண்டவன் அரூபியாய், எங்கும் நிறைஜோதியாய், உன்னிலும், என்னிலும்,உலகிலும், அண்டசராசரங்களிலும், வியாத்திருப்பதாக, மெய்யன்பரே சொல்வார். அத்தகைய ஆண்டவன், எவ்விதம் அவரது 'ஆன்மா'வாகயிருக்கின்றாரோ, அவ்விதம்தானே 'நமது' ஆன்மாவிலும் திருத்தாண்டவம் செய்துகொண்டிருக்கவேண்டும்!

'ஆண்டவன் கூத்துத்தான் உலக ஓட்டம்'—என்று மெய்யன்பரே, உபன்யாசிப்பார். நீங்கள், கேட்டிருக்கலாம். அந்த ஆண்டவனால், ஆட்டிவைக்கப்படுபவர்தாமே நாமும்? ஆகவே, நம்மைக்கொண்டு இந்த மெய்யன்பர்களின் துடுக்கடுக்கும் 'திருவிளையாடலில்' அவர் பூஜிக்கும் ஆண்டவன் இறங்கியிருக்கவேண்டும்! இல்லையெனில் நமக்குமட்டும் "இளைஞர்களை மயக்கும்" எழுத்து ஆற்றலை, அவர் அளிப்பாரா? வேதாகமங்களை வெறுக்கும் மனோபாவத்தை, மக்களிடம்தான் பரப்புவாரா?

"நம்மைக் குறை கூறுவதா?" என்று, ஆண்டவனுக்கு கோபம் வந்திருந்தால், இத்தனை நாள், நம்மைவிட்டுவைத்திருக்கமாட்டார். எப்போதோ கொண்டுபோயிருப்பார். ஆகவே, அவருக்கு நாம் இருப்பதிலதான் ஆனந்தம் இருக்கிறதுபோலும்! அனுதினமும் பூஜித்துக்கிடந்த திருவண்ணாமலை ரமணருக்கு 'புத்து' நோயைத் தந்தாரேயொழிய — நமக்கு அல்ல. இந்த உண்மையை, மறந்துவிடாதீர்கள்.

ஆண்டவனுக்கே, நம்மைப்பற்றிய கோபம் வராதபோது, இந்த மெய்யன்பர்களுக்கு மட்டும் ஏன் கோபம் வரவேண்டும் என்று நீங்கள், கேட்கலாம்? உபன்யாசத்துக் களைத்து, ஆவின்பாலும்,அழகான மாலையும் ஆளுக்குத் தட்சணையும் சமர்ப்பிக்கிறோமே, அதுயாருக்கு? ஆண்டவனுக்கா! அல்ல, அல்ல. இந்த மெய்யன்பர்களுக்குத்தானே? அதனால்தான் கோபம் வருகிறது, இவர்களுக்கு! ஆண்டவனுக்காக அல்ல தம்பிரான்களும், மெய்யன்பர்களும் நம்மீது சீறுவது — தங்களுக்காக! தங்களுடைய வாடாத் திருமேனி வதங்கிடுமோ என்ற பயத்தின் விளைவாக!!

'பிரகாசம்' — எங்கும் ஏற்பட்டுவிட்டால், 'இருட்டு' இருக்காதே, நாமும் 'இரவு உத்தியோகம்' சமுதாயத்தில் நடத்த இயலாதேஎனும் சோகத்தால்தான், இவ்விதம் பேசக் கிளம்பியிருக்கிறார்கள். மெய்யன்பர்களும் தம்பிரான்களும். கடவுள் பக்தியினை வளர்க்கவும், வகை செய்யவும் இவர்கள் யார்? ஜீவன்முக்தி பெறவேண்டுமெனும் ஆசையிருந்தால் 'அரகர மகாதேவா!' என்று இருக்குமிடத்திலிருந்த வண்ணம், பஜித்துக்கொண்டு பரமபதம் அடையும் வழியில் செல்வார்களா? அதைவிட்டு விட்டு, இந்த 'மாயப் பிரபஞ்சத்தை' எண்ணி அவன் வேலை என்ன? இவன் எப்படியிருக்கிறான்?' என்ற விஞாராய்ச்சியில் ஈடுபடுவார்களா!

ஆண்டவன் மீது உண்மையான'மெய்யன்பு' இவர்களுக்கிருந்தால், இவ்விதமெல்லாமா வற்புறுத்துவார்கள்! பேசுவார்கள்!!

ஆகவே', தங்களுக்காக 'இவ்விதமெல்லாம் பேசும்: திருக்குழாம் குறித்து, சிந்தையைச் செலுத்த வேண்டாமென்பதை தோழர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பாம்பு, புற்றுக்குள்ளிருக்கும் வரைதான், அதற்கு பாதுகாப்பு! வெளியில் வந்து சீறினல் பகுத்தறிவுள்ள மனிதன் விட்டு விடமாட்டான்!! —ஏதோ நம்மகாலம் இவ்வளவுதான் என்று இருக்காமல், தங்களை அறிமுகப்படுத்திக் கொள்ள, 'மெய்யன்பாகள் முன்வருவது, பரிதாபகரமான செய்திதான்.

★

முகவரி

காஞ்சி. கல்யாணசுந்தரன்

26. சப்பாணிபிள்ளையார்

கோயில் தெரு

காஞ்சிபுரம்.

# "லீ"—விளக்கமும், நமது கீதமும்!

உலக மக்கள்

| ரஷ்யா அதோடு தொடர்பு கொண்டவை | மேற்கத்திய நாடுகள் அவையுடன் சேர்ந்தவை | ஆசியா ஆபிரிகா |
| --- | --- | --- |

*

"உலகத்தில் வாழ்வோர் யார்?"

"பகுத்தறிவு படைத்த மனிதர்கள்!"

"அவர்களது நிலை என்ன?"

"இடத்துக்கிடம் மாறுபாடு—எல்லைக்கு எல்லை வெவ்வேறு விதமான வாழ்க்கை. நாட்டுக்கு நாடு அரசு முறைகள் வெவ்வேறு. ஓரிடத்தில் இன்பமயம்! மற்றோரிடத்தில் துன்பக் கூச்சல்!!"

*

"ரஷ்ய முறையில் வெற்றிகண்ட நாடுகளில் பேதம் ஒழிந்து, சமதர்மம் நிலவுகிறதல்லவா?"

"ஆம்! அங்கு மனிதர்கள், மனித உரிமைகளையும் வாழ்க்கையையும் அனுபவிக்கமுடியும். தொல்லையில்லை"

"அப்படியானால்—ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் இருக்கும் மக்கள் எவ்வித இன்பமுமில்லாது, விஞ்ஞான முன்னேற்றமின்றி, வேதனையோடு உள்ளார்களா?"

"இல்லை — எல்லோரும் இல்லை. விஞ்ஞான ஒளி, வீசுகிறது. முன்னேற்ற மணம் கமழ்கிறது. தொழில் வளம், உண்டு. ஆனால், அதனால் விளையும் இன்பத்தை சிலர்மட்டுமே பூரணமாக அனுபவிக்கிறார்கள்"

*

"ரஷ்ய முறை—மேற்கத்திய முறை, இரண்டையும் விட்டுவிட்டு ஆசியாக் கண்டத்தைப் பார். அதன் நிலை என்ன?"

"இருட்டுக் கண்டமென அழைக்கப்படும் ஆபிரிகாவில், எவ்வளவு ஏழ்மையும் அறியாமையும் இருக்கிறதோ, அதைவிட அதிகமான அளவில், ஆசியப் பகுதி நாடுகளில் கோடிக்கணக்கான மனிதர்கள், ஏழ்மையாலும், தொழிலின்றியும், வாழமுடியாமல் வாடுகிறார்கள்"

*

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக்காரியதரிசியான டிரிக்வீ-லீ, உலகத்தை, மூன்று பகுதிகளாகப் பிரித்து, மேற்கண்ட விதமாக விளக்கமொன்றை வெளியிட்டுள்ளார். உலகில் வாழும் மொத்த மக்களை எடுத்துக்கொண்டு, அவர்கள் யாவரும் எவ்வெவ்வித வாழ்க்கையை நடத்துகிறார்கள் என்பதைக் கணக்கிட்டால், தலைப்பில் நாம் தந்திருப்பதுபோலப் பிரிக்கலாமாம்.

உலக மக்கள் தொகையை
மூன்று பங்கு ஆக்கினால்,

அதில் ஒரு பங்கு கம்யூனிசக் கொள்கையில்!

மற்றோர் பகுதி 'மேற்கத்திய' முறையில்!!

இன்னொரு பங்கு இரண்டும் கெட்டான் நிலையில்!

இதுதான், லீ, தரும் விளக்கம். இந்த மூன்று பங்கிலும், சராசரி ஒரே தொகையுள்ள, மக்கள் கூட்டம்தான் வாழ்கிறது. அதில் ஒரு பகுதி, கடைப்பிடித்து வருவது, கம்யூனிசக் கோட்பாடுகள்! மற்றோர் பகுதி, 'ஜனநாயகம்' என்ற பெயருடன் வாழ நினைப்பது!! இன்னொரு பகுதி, இரண்டும் கெட்டான் நிலையில் இருப்பது!!!

"விடுதலை—சமத்துவம்—சமதர்மம் மலரவேண்டும்"

"இவைகளைப் பெற, கம்யூனிச முறை தேவலாமா; மேற்கத்திய வழி சிறந்ததா?"

"இரண்டையும் மேற்கொள்ளாமல், இதில் கொஞ்சமும், அதில் கொஞ்சமுமாக ஒட்டவைத்து புது வழி காணலாமா?"

இவ்விதம், ஒரு பக்கம், விடுதலைத் தாகமும், மற்றோர் பக்கம் அந்த விடுதலையை வேற்றாருக்கு இரையாக்கிடக்கூடாது என்கிற சஞ்சலமும் கொண்டதாக, ஆசியாவும் ஆபிரிகாவும் இருப்பதாக, அன்பர் லீ விளக்கம் தந்துள்ளார்.

இரண்டுங்கெட்டான் நிலையிலிருக்கிற பூமிப்பாகம் இருக்கிறதே அது நாகரீக உலகுக்கே அபாயம் அறிவிப்பாக இருக்கிறதாம்! கோடானு கோடிமக்கள், வாழமுடியாமல்தவிப்பது, இங்குதான்! ஏழ்மையும்; அறியாமையும். பாந்துகிடப்பது இந்த இருகண்டங்களிலும் தான்! – இதை லீ, பரிதாபத்தோடு சுட்டிக்காட்டியிருக்கிறார், "வாயற்ற ஊமைகளாக வாழ்ந்துவரும் ஜனக்கூட்டம்" என்பதாக. "ஏழ்மை தாண்டவமாடுகிறது! ஆனால், பழையநிலை இல்லை. ஊமைகளாக இல்லை இப்போது சுதந்திரம் குறித்துப் பேசத் தலைப்பட்டுவிட்டார்கள். பொருளாதார சமத்துவம் வேண்டுமென முழக்கமிடுகிறார்கள். இந்தக் கோரிக்கைகளை எவராவது அடக்க முயன்றால், அந்த அடக்குமுறைகளை மீறி எழுந்தவண்ணமே இருக்கிறது"—என்றும், அவர், எடுத்துரைத்துள்ளார்.

பொதுவுடைமை—
மேற்கத்திய முறை—
இரண்டுங்கெட்டான் நிலை—

இந்த ரகங்களில், கடைசிரகம், நாகரீக வளர்ச்சியை சவாலுக்குஅழைக்கிறதாம்! "ஏ, வளர்ந்துவிட்ட நாடுகளே! என்னைப்பார். நீ, விமானம் கண்டாய்! அணுகுண்டு அறிந்தாய்! ஆராய்ச்சியில் சிறந்தாய்! புதிய அரசுமுறைகளைத் தெரிந்தாய்! தொழில் வளத்தில் வளர்ந்தாய்! வாழ்க்கைமுறையில் ஏற்றம் பெற்றாய்! ஆனால் நானோ? அன்றுபிறந்த நிலையில் எவ்வித மாற்றமும் பெறவில்லை. உன்னைப்போல் வளரவில்லை. கோடானு கோடி மக்கள், என் பகுதியில் பட்டினி! தொழிலில்லாமல் வாடுவோர் தொகை ஏராளம்! அஞ்ஞானம் ஆட்சி புரிகிறது! பழைமை மாறவில்லை" — என்று, 'இரண்டுங்கெட்டான்' நிலையிலிருக்கும் பகுதி முதலிரண்டு பகுதிகளையும், சவாலுக்கு அழைக்கிறதாம்! சங்கடத்தோடு வெளியிட்டிருக்கிறார், தோழர் லீ. "இந்தச் சவால், ஒரு அபாய அறிவிப்பு. இதனைச் சமாளிக்க, நல்லவழிகளை நாம் கண்டாக வேண்டும்" என்று, அமெரிக்கஅதிபர்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறார். வளமையினருகே வறுமையிருப்பது ஆபத்து! உல்லாசத்துக்கு அருகே உலர்ந்தோர் இருப்பது அபாயம்!!—இந்தப்பள்ளத்தை, நாம் எப்படியாவது, தூர்க்கவேண்டும். இன்றேல் நாகரீக உலகமும், சிதறுதலுக்கு ஆளாக நேரிடும் என்று எச்சரித்துள்ளார். எச்சரிக்கையோடு, திட்டங்கள் சிலதையும் செப்பியிருக்கிறார்.

"தொழில் வளம் பெற்ற பகுதி, இந்தப் பகுதிக்கு 'உதவவேண்டும்'' என்பதுவே, அந்தத் திட்டங்களில் குறிப்பிடக் கூடியதாகும். உண்மையில் இந்த யோசனை, வரவேற்கக் கூடியதே! காடாகக் கிடப்பதை நாடாக ஆக்கினால்தான்' வாழமுடியும்—ஓடியாட முடியும்—உல்லாசமாக உலவ முடியும். வீடும், பக்கத்தில் காடுமிருந்தால், காட்டில் உலவும் புலியும் பாம்பும் வீட்டிற்குள் நுழையத்தான் செய்யும்! ஆகவே, அன்பர் லீயின், அறிவுரையை எவரும் மறக்கார். ஆனால், இந்த உதவியைத் தருவது எந்தப் பகுதி? முதலாவதா அல்லது இரண்டாவதா என்று, அவரே நிர்ணயமும் செய்திருக்கிறார். "உதவ வேண்டும்"—"உதவி, பெறவேண்டும்!"—இதில், எவருக்கும், ஆட்சேபனை வராது. ஆனால், "இந்த உதவியை இன்னார்தான் செய்யவேண்டும்" என்று நிர்ணயிக்கும் போது, உதவியைப் பெறும் பகுதியினருக்கு அச்சமும் ஐயமும் தோன்றத்தானே செய்யும். அரிசிக் கஞ்சி தவிர, அணுக்காசுகளைத்தவிர வேறெதையும் கண்டறியாத பட்டிக்காட்டு அஞ்சலைக்கு பாலும் பழமும், பட்டுச்சேலையும், ரூபாநோட்டும் நீட்ட, "நான்தான் போவேன்!" என்றொருவன், உரிமையும் ஆவலும், பாராட்டிக் கொண்டு வந்தால் அர்த்தம் என்ன? அஞ்சலை அழகுள்ளவள்! அல்லது, தனக்குப் பயன்படக் கூடியவள்! அவளை, அயலான்கைக்கு சிக்கவைக்கக்கூடாது, என்கிற அல்ப ஆசைதானே.

அதே, ஆசையைத்தான் அன்பர் லீயும் தெரிவித்துள்ளார்—"இந்த இரண்டுக் கெட்டான் பகுதிக்கு மேற்கத்திய தொழில் அதிபர்கள் உதவவேண்டுமாம்"

நல்ல விளக்கத்தையும், அதனுள் நஞ்சையும் தடவித்தந்துள்ளார், லீ. பண்படாது, நாகரீக உலகுக்கே அபாய அறிவிப்புச் செய்து கொண்டிருக்கும் "மூன்றாவது" பகுதியை, மேற்கத்திய முறைகளுக்குத் திருப்பிவிட்டு விடவேண்டும்—ரஷ்யக்கூடாரத்துக்குள் நுழையும்படி விட்டுவிடக்கூடாது என்று, விளக்கியுள்ளார்.

கம்யூனிசக் கொள்கையைக் கொண்டிருக்கும் முதல்பகுதி,

அதற்கு எதிரிடையான முறைகளைக் கொண்டிருக்கும் இரண்டாவது பகுதி,

இந்த இரண்டுக்குமிடையிலிருக்கும் வேற்றுமைகள், வித்தியாசங்கள் பற்றிய பிரச்னைகள், வேறு விஷயம்—விவேகிகள் மட்டுமின்றி, சாதாரணமானோரும் இன்று விளங்கிக் கொண்டிருக்கும் விஷயமாகும். ஆகவே, நாம், லீயியின் 'ஆசை'யைப் பற்றி ஒதுக்கிவிடுவோம். ஆனால், உலகத்தின் நிலைமையை மூன்றாகப் பிரித்து, விளக்கம் தந்துள்ளாரே அதை மட்டும் கவனிப்போம். அவரது ஆசை, எதுவாயினும், அவர் உலகம் பற்றி வெளியிட்டுள்ள விளக்கத்தை நாம் அலட்சியப்படுத்திவிட முடியாது.

அவர் குறிப்பிடும் முதல் பகுதி, இரண்டாம் பகுதி ஆகிய இரண்டு இடங்களிலும் தொழில்வறுமையும், ஏழ்மைப் பிணியும் இல்லை. ஆனால்—சம உரிமை ஓரிடத்திலும், சுயநலத் தேவை மிகுந்தோர் மற்றோரிடத்திலும், நிறைந்து கிடக்கின்றனர். ஆனால் வாழ்வு' மின்றி, வளர்ச்சியுமின்றி, சம உரிமையுமில்லாது, இருக்கிறது மூன்றாவது பகுதி.

இந்த இரண்டுங்கெட்டான்பகுதி, நாகரீக உலகுக்கே சவால் செய்கிறது, என்கிறார், லீ.

இந்த 3-வது பகுதியில், இந்தியா மட்டுமல்ல அதைப் போலப் பற்பல நாடுகள் உள்ளன. தொழில் வளத்தில் ஓரளவு வளர்ந்த நாடுகளும் உள்ளன — தொழில் வளம் காணாத பிரதேசங்களும் இருக்கின்றன. மாளிகை நிரம்பிய இடங்களும் குடிசைகள் பரவிய பூமியும் உண்டு. ஆலைகளின் புகை எழும்பும் பிரதேசங்களும், அவைகளையே கண்டிராத பூமி பரப்பும் இருக்கின்றன. ஓரளவு (முதலிரண்டு பகுதிகளில் இருக்குமளவு இல்லையென்றாலும்) வளர்ச்சி பெற்ற வளமான பகுதிகளும் உண்டு! எதுவுமேயில்லாத பகுதிகளும் உண்டு!!

வளம்! வறுமை!! — இரண்டும், நாடுகளிலே மட்டுமல்ல, மனிதர்களிடத்திலும் இருக்கின்றன.

வளராத பகுதிதான் மூன்றாவது ரகம். ஆனாலும், அதிலும் சில பிரதேசங்கள் வளம் பெற்றவையாயில்லாமலில்லை! சிலர் வளமான வாழ்க்கை அனுபவிக்காதவர்களாக இல்லை!!

(அடுத்த பக்கம் பார்க்க)

## கோவை நகரக் கழக உறுப்பினர்க்கு

கோவை நகரிலுள்ள வட்டாரக் கிளைகளின் தேர்தல்கள், சிறப்பாகவும், சட்ட திட்டப்படியும் நடைபெறவேண்டி 16—11—52ம் நாள் ஞாயிற்றுக் கிழமையை தேர்தல் நாளாக நிர்ணயிக்கிறேன்.

இப்பொழுதுள்ள தேர்தல் முடிவுகள் கலைக்கப்பட்டனவாகக்கொண்டு புதிய தேர்தலுக்குத் தயாராகிக் கொள்ளும்படி கழக உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

25 உறுப்பினர்க்கு மேற்பட்ட எண்ணிக்கையைக் கொண்ட வட்டாரங்களே கிளைகள் அமைத்துக் கொள்ளலாம்.

இதுவரை இருந்துவரும் நகரக் கிளைச் செயலாளரே தேர்தலை நடத்தும் பொறுப்பாளர் ஆவார்.

நகரக் கிளைச் செயலாளர் நியமிக்கும் தேர்தல் அதிகாரிகளையே வட்டாரக் கிளைகள் ஏற்றுக்கொள்ள வேண்டும். நகரச் செயலாளர் குறிப்பிடும், இடம், நேரம் ஆகியவற்றில் தான் வட்டாரக் கிளை தேர்தல் நடைபெற வேண்டும்.

15—10—52ம் நாள்வரை உறுப்பினராகப் பதிவு செய்துகொண்டவர்கள் மட்டுமே தேர்தலில் கலந்துகொள்ளவேண்டும்.

உறுப்பினர்கள் தாங்கள் தங்கள் ரசிதுகளை அத்தாட்சியாக உடன் வைத்திருக்கவேண்டும்.

நகரக் குழுவின் தேர்தல்பிற்பாடு அறிவிக்கப்படும்.

ஒவ்வொரு வட்டாரக் கிளையும் ஒரு செயலாளர், ஒரு துணைச் செயலாளர், ஒரு பொருளாளர், நகரக் குழுவிற்கு இரண்டு பிரதிநிதிகள், நிர்வாகிகள் உள்ளிட்டு 11 பேருக்கு மேல் 21 பேருக்குக் குறையாத செயற்குழுவினர் ஆகியோரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

'வட்டாரக் கிளை பதிவுச் சீட்டுகளை நகரக் கிளைச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

அண்ணாதுரை
பொதுச் செயலாளர்
தலைமைக் கழகம்.

*முன் பக்கத் தொடர்ச்சி*

முதலிரண்டு பகுதிகளோடு, ஒப்பிடும்போது, இது, பாலைவனத்தில் கிடக்கும் பச்சை இலைகளைப்போலக் காட்சி தரலாம். ஆனால், அந்தப் பச்சை தளிர் கூட இல்லாத, மணல் வெளியும் இருப்பதை மறந்துவிடக் கூடாது. ஆபிரிகாவில் வாழும் மக்களிடத்தில் தாண்டவமாடும் ஏழ்மையையும் வறுமையையும் பற்றி நினைக்கும்போது, அங்கே உரிமைக்காக அடிபடும் கருப்பு நிற மக்களையும், அவர்களை அடிக்கும் வெள்ளை நிறத்தவரையும் மறந்துவிட முடியாது! காடுகளில் பணியாற்றும் நீக்ரோக்களையும், ஆலைகளை நிர்வகிக்கும் சீமான் கும்பலையும் நினைக்கத்தான் வேண்டும். ஆபிரிகக் கண்டம், உலகத்தோடு ஒப்பிடும்போது, பிற்போக்காகயிருக்கலாம். ஆனால், அதனுள்ளேயிருக்கும் சூழ்நிலைகளை வைத்துப் பார்க்கும்போது, ஒரு பக்கம் வறுமையும் மற்றோர் மக்கம் வளமையும் அதற்குள்ளாகவே நிறைந்து கிடப்பதையும், "வளமை", "வறுமை"யைச் சித்திரவதை செய்வதையும் மறந்துவிடக்கூடாது.

தோழர் லீ, உலகத்தை, மூன்று பகுதிகளாக்கி நிலைமைகளை விவரித்தார். ஆசிய கண்டமும், ஆபிரிகாவும் இரண்டுங்கெட்டான் நிலையிலிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

ஆபிரிகாக் கண்டத்தில் நெடுநாட்களாக புகைந்து இப்போது வெடித்திருக்கும் நிறவெறிப் பிரச்னையைக் குறித்து நாம் சிந்திக்கத்தான் வேண்டும். அதேபோல, ஆசியாக் கண்டத்தைச் சேர்ந்த இந்திய உபகண்டத்துக்குள்ளாகவே, நெடுநாட்களாக மனிதர்களுக்குள்ளாக இருந்து வரும் பேதா பேதங்களைப் பற்றியும் யோசிக்கத்தான் வேண்டும். இந்த இருட்டுக் கண்டங்களில், முன்னேற்ற வாடை வீசாமலிருப்பது மட்டுமல்ல, தனக்குள்ளாகவே ஏராளமான தகராறுகளையும் வளர்த்துக் கொண்டிருக்கிறது. உயர்ந்தவன் தாழ்ந்தவன் பேதா பேதம்! ஒருபகுதியினர் செலுத்தும் பொருளாதார ஆதிக்கம்! ஒரு கூட்டத்தார் செலுத்தும் அரசியல் அதிகாரம்! மனிதனை மனிதனை நடத்த விரும்பாத அநாகரீகம்! இத்தனையும், நடமாடும் அலங்கோலங்களை, ஆசியாக் கண்டத்தின் பல பகுதிகளில் நாம் காண முடியும்.

உலகத்தை மூன்றாக்கி விளக்கம் தருகிறார்.

நாம், இந்த உபகண்டத்தில் அவர் கூறும் விளக்கப்படி இருக்கும் நிலைமையை ஆராய்வோம்.

லீ—முதலிரண்டு பகுதிகளும், தொழில் வளம் மிகுந்தும், முன்னேற்ற மணம் கமழ்ந்தும் விளங்குவதாகக் குறிப்பிட்டார். கடைசிப் பகுதி, நாகரீக உலகுக்கு, அபாய அறிவிப்பு செய்வதாக எச்சரித்தார்.

அவ்விதம், அபாய அறிவிப்பு செய்யும் பகுதிக்குள்ளேயேஓரிடத்தில் பசுஞ்சோலையும், மற்றோரிடத்தில் பாலைவனமும் இருப்பதை,நாம் சுட்டிக்காட்டவிரும்புகிறோம். பாழடைந்த வீடு!—என்று பார்ப்போர் கூறிடலாம். ஆனால், அந்த வீட்டிலேயே துளவு சிதையாமல் சீர் திருத்தப்பட்ட பகுதியும் இருக்கிறது—சிதைந்து அழியும் பின்கட்டும் உண்டு.

லீ தந்த விளக்கப்படி, இந்தியாவில், முதல் பகுதியான கம்யூனிசக் கொள்கையைக் கடைப்பிடிக்க விரும்பும் பகுதியும் இருக்கிறது. மேற்கத்திய முறையினை,அப்படியே அமுல் நடத்தத்துடிக்கும் இடமும் இருக்கிறது. வளமையுண்டு! வறுமையும் உண்டு! ஆலையரசும் இருக்கிறது! ஆலைப்புகையை அறியாத பகுதியும் இருக்கிறது!

'இந்திய' மக்கள்

| | |
|---|---|
| பொதுவுடைமை ஆசைகொண்டோர் | மேற்கத்திய முறையை விரும்புவோர் |
| வறுமையால் வாடுவோர்! | வளம் பெற்றோர்! |
| அரசியல் அதிகாரம் இல்லை | ஆதிபத்யம் செலுத்துவோர் |
| பொருளாதார உயர்வு இல்லை. | பணாதிபத்யம் பெற்றோர் |

இவ்விதம்,வேறுபாடுகள்,நிரம்பிய பகுதிகள், லீ குறிப்பிடும் 'இரண்டுங்கெட்டான்' பகுதியில் இருக்கின்றன.

உலகத்தைப் பார்த்து, முன்னேறாத பகுதிகள் எச்சரிக்கை தருவதாக, லீ, அறிவிக்கிறார்.

இந்திய உபகண்டத்தில் ஆதிபத்யம் செலுத்துமிடத்தை, பின் தங்கிக்கிடக்கும் பகுதிகள், ஆத்திரத்தோடு பார்க்கின்றன.

காரணம், வளமை ஓரிடத்தில்! வறுமை ஓரிடத்தில்!!

விஞ்ஞான வளர்ச்சி ஒரு பக்கம்! அஞ்ஞான இருள் மற்றோர் பக்கம்!!

லீ, ஐக்கிய நாடுகளின் சபையின் காரியதரிசி. ஆகவே, அவர், உலகக் கண்ணோட்டத்தில் பிரித்தார்.

அவர் குறிப்பிட்ட இருட்டுக்கண்டங்களிலும் ஓரிடத்தில் வளமையும் மற்றோரிடத்தில் வறுமையும்இருப்பதை நாம், எடுத்துக்காட்டவிரும்புகிறோம். நமது விளக்கத்தை, குறுகிய கண்ணோட்டம் என்று குற்றம் சாட்டலாம். ஆனால், வறுமையால் வாடும் பிரதேசம், வாழும் பிரதேசத்துக்கு அபாய அறிவிப்புசெய்து கொண்டிருக்கிறது! கண் முன் காணும், உண்மை இது. மார்வாடியையும்,சேட்டையும்,பிர்லாவையும் டாடாவையும் தென்னாட்டார்,எரிச்சலோடு பார்க்கின்றனர்!! டில்லி, பண அரசு!—என்கின்றனர்!!

இந்த பிரத்யட்ச உண்மையை மறந்துவிடக்கூடாது.

இவ்விதம், பின்தங்கியிருக்கும் பகுதியில், லீ குறிப்பிடுவதுபோல, "மக்கள் ஊமையாகயிருந்த நிலை மாறி, சுதந்திரதாகமும், சமதர்ம முழக்கமும்" ஒலிக்க ஆரம்பித்துள்ளனர். அதுதான், "திராவிடநாடு திராவிடருக்கே" எனும் கீதம்.

## சேராத கடிதம்

சி. சுப்ரமண்யம்,
நிதி யமைச்சர்,
சென்னை.

அமைச்சரே!

தாங்கள் பம்பாய்வாழ் தமிழர்களிடம் ஆற்றிய சொற்பொழிவு ஒன்றினைக் கண்டேன்; மகிழ்ந்தேன். கொங்கு நாட்டுத் துணிவு, உம்மிடம் இன்னும் ததும்புகிறது என்பதை எடுத்துக் காட்டிற்று. எந்தக் கட்சியில் இருந்தாலென்ன! உண்மை நிலையை மறைத்துவிடவா முடியும்? மனச்சாட்சியை விற்கும் பலர் உள்ள இந்த நேரத்தில் மனந்திறந்து பேசிய அந்த வார்த்தைகள் அட்சரலட்சம்பெறும். சென்னைக்கு வந்து சென்ற பண்டித நேரு, பகிரங்கமாக வெளியிட்ட வார்த்தைகளை மறந்துவிடாமல், பம்பாய்க்குச் சென்றன்றோ பதில் தந்திருக்கிறீர்! "தென்னாட்டார், வடநாட்டில்வந்து சுரண்டுவதாக அங்கே யிருப்பவர்கள் குறை கூறுகிறார்கள். ஆனால் நீங்களோ, வடநாட்டார் வந்து சுரண்டுவதாகக் கூச்சல் போடுகிறீர்கள்" என்றல்லவா, நம்மைப் பார்த்துச் சொன்னார். அதற்கு, பம்பாய் தமிழ்ச் சங்கத்தில், தாங்கள் தந்த பதிலுரை, பாராட்டக்கூடியது. உண்மையை ஒளிக்காது, உரைத்துள்ளீர். "லாபம் சம்பாதிக்கும் நோக்கத்தோடு அல்ல, தமிழர்கள் வடக்கே வருவது" என்று வெளியிட்டிருக்கிறீர்! தமிழன் என்ன, வட்டிக் கடை வைக்கவும், பாங்கிகளை நடத்தவும், ஆலைகளை அமைக்கவுமா, வடக்கே போகிறான்? இல்லையே! வாழ்வதற்காகப் போகிறான்! குமாஸ்தாவாக, ஆபீஸ் எடுபிடியாக 'மூளை'யைத் தரும் உதவியாளனாக, சேவை செய்யத்தான் போகிறான். அதையும் நீங்கள் குறிப்பிட்டிருக்கிறீர்கள். "லாப வேட்டையல்ல தமிழர்கள் நோக்கம்; சேவைபுரிதல். அதனாலேயே ஏராளமான பேர் இங்கே வந்துள்ளார்கள்" என்று காங்கிரஸ் அமைச்சராகிய தாங்கள் செய்த முழக்கம், வடநாட்டினர் கண்களைத் திறந்துவிடவேண்டும் என எதிர்பார்க்கிறேன். "கெடுமதி கொண்டோரல்ல தமிழர்கள்! லாபம் ஒன்றே குறிக்கோள் எனக் கருதுவோரல்ல, நாங்கள்" என்றும் பேசினீர்களாம். உண்மைதானே! இங்குவரும் சாதாரண சேட் முதல், பெரிய பெரிய பிர்லாவரை, எதைச் சுரண்டலாம், எப்படிச் சுரண்டலாம் எனும் கெடுமதியோடு தானே வருகிறார்கள். இந்தக் கெடுமதியினைத் தாங்களும் உணர்ந்திருக்கிறீர், என்பதை அறிய மகிழ்ச்சி—அதை, வெளியிட்டமை காண பரமானந்தம், எனக்கு—தமிழ்ச் சங்க வரவேற்பில் பேசியபோது, பம்பாய் வாழ் தமிழர்களுக்கு, அவர்களது பிறப்பிடம் எதுவென்பதையும் உணர்த்தினீர்களாம். வடக்கு, புகுந்த இடம்! பிறந்த இடம் தமிழகம்!! — என்பதை, வலியுறுத்திச் சொன்னீர்களாம். தாயகத்துக்குப் பெருமையை, ஆங்காங்கு சிதறிக்கிடக்கும், நமதுமக்கள் அறியவேண்டிய அவசியமான நேரம்தான் இது. "பிறந்த இடம்" தமிழகம்! "புகுந்தஇடம்" வடக்கு!! — இது, தங்கள் வாயால், வந்தது காண இரட்டை மகிழ்ச்சி. கோவை வக்கீலாகயிருந்து கூறியிருந்தால், சாதாரணமாகக் கருதிவிடலாம். ஆனால் இப்போது தாங்கள் அமைச்சராயிற்றே. அதுவும், காங்கிரஸ் அமைச்சர். அவர், இவ்விதம் கூறுதென்'து, வரவேற்கப் படவேண்டியதுதானே? தாங்கள், வடக்கை மாமியாராகவும் நம்மவரை மருமகளுக்கும் ஒப்பிட்டுக்காட்டினீராமே! மகா துணிச்சலான, ஆசாமிதான். திராவிட முன்னேற்றக் கழகப் பேச்சாளர் பேசும் வார்த்தையை நீரும் பேசியிருக்கிறீர்! உண்மைதானே மாமியாரின் கொடுமை, எங்களைவிட, மந்திரியாயிருக்கும் உங்களுக்கு அதிகமாகத்தான் தெரிந்திருக்கும்.

தாங்கள் இவ்விதமெல்லாம் பேசியிருக்கிறீர்கள். ஆனால், தாங்கள் பேசிய இதே வார்த்தைகளை, எம் போன்றோர் கூறினால் மட்டும் காங்கிரஸ்காரர்கள் ஏன் கடிந்துரைக்கிறார்கள்? இதுதான், எனக்கு, விளங்கவில்லை.

அன்புள்ள,
தோழன்.

### மஜீத் கொலை வழக்கு

**28—10—52:**- எதிரி கண்ணனின் வக்கீல் சக்ரபாணி (அய்யங்கார்) கேட்டுக்கொண்டதற்கிணங்க, வழக்கு நவம்பர் 5-க்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

# தி. மு. க. மாவட்டக் கிளை தேர்தல்கள்

கீழ்க்கண்ட மாவட்டக் கிளைகளின் தேர்தல்கள் கீழ்க்கண்ட விபரப்படி நடைபெறும். தலைமை நிலையத்தில் பதிவு செய்துகொண்ட கிளைகளுக்குப் 'பிரதிநிதி உரிமைச் சீட்டு' தலைமை நிலையத்திலிருந்து அனுப்பிவைக்கப்பெறும். கிளைக் கழகப் பிரதிநிதிகள், உரிமைச் சீட்டோடுப் பாக்கியுள்ள ரசீதுகளையும், பாக்கியுள்ள சந்தா தொகையையும் உடன் எடுத்துக்கொண்டு சென்று மாவட்டக் கழகத் தேர்தலில் கலந்துகொள்ள வேண்டும்.

| மாவட்டம் | தேர்தல் நாள் | இடம் | மணி | தேர்தல் அதிகாரி |
|---|---|---|---|---|
| இராமனுதபுரம் | 9—11—52 | நாடார் பரிபாலன சங்கக் கட்டிடம் விருதுநகர். | மாலை 4 மணி | என். வி. நடராசன் |
| திருநெல்வேலி | 9—11—52 | தி, மு. க. மேடை திருநெல்வேலி சந்திப்பு | காலை 10 மணி | என். எஸ். இளங்கோ |
| தஞ்சை | 16—11—52 | அருளானந்தசாமி நாடார் தோட்டம், தஞ்சை. | மாலை 3 மணி | சி. பி. சிற்றரசு |

குறிப்பு:—செங்கற்பட்டு, வ. ஆற்காடு, தெ. ஆற்காடு, கோவை மாவட்டங்களின் தேர்தல்கள் 23—11—52 ஞாயிறன்று நடைபெறும். இடம், நேரம் பின்னால் அறிவிக்கப்படும்.

இரா. நெடுஞ்செழியன்,
பொறுப்பாளர், தலைமை நிலையம்.

## முழக்கம்

சேலம்: 17—10—52 அம்மாப்பேட்டையில் நகர சபைத் தேர்தலில் வெற்றிபெற்ற சுயேட்சை அபேட்சகர்களான தோழர்கள் எ. கே. தம்மண்ணன், பி. மதுரைப் பிள்ளை, பி. கே. வரதராஜுலு, எ. மாரியப்பன், எம். வி. சொக்கலிங்கம், கே. ஆர். கோபால், பி. என். அம்மாசி கவுண்டர், எஸ். சுந்தரம், அப்துல் மஜீத், ஆர். நாராயண பிள்ளை, எ. பெருமாள், ஜி. நாகப்பன் முதலியோரைப் பாராட்டி செல்வம் சதுக்கத்தில் சி. எம். குருசாமி தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ஈ. ஆர். கிருஷ்ணன் (தி. மு. க.) கூடுமியான் சாயபு, எ. வி. குப்புசாமி, ஆறுமுகம், (தி. க.) அழகரசன் பேசினர். கே. ஆர். பெருமாள் இல்லத்தில் தேனீர் விருந்தளிக்கப்பட்டது.

ஆமதாபாத்: 21—9—52ல் நா. முனிசாமி தலைமையில் நடைபெற்ற பிரிவினை விழாவில் இரா. கிருட்டினமூர்த்தி பேசினர். பொதுச் செயலாளர் படத்தை பொ. வைத்திநாதன் திறந்து வைத்தார். தோழர்கள் இராதாகிருட்டினன், சேசையா, சோமசுந்திரம், தெய்வசிகாமணி குழுவினர் இன்னிசை நடந்தது. தோழர்கள் அ. வடிவேல், தி. நெடுமாறன், இரத்தினவேல், ந. பெருமாள், சொற்பொழிவாற்றினர். மு. இராசமுனி குழுவினரால் சி. என். எழுதிட்டிய "நன்கொடை" நாடகம் நடைபெற்றது.

மேலூர்: 12—10—52ல் சொற்பொழிவு பயிற்சிக் கூட்டம் சாமிநாதன் தலைமையில் துவங்கிற்று. சென்னை வி. இளஞ்சேரலாதன் 'கழகக் குறிக்கோள்' குறித்துப் பேசினர்.

கோவை: 21—10—52 இரவு மேற்கு வட்ட தி. மு. க. சார்பில், பகுத்தறிவு கலா நிகழ்ச்சி சி. டி. தண்டபாணி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் சிற்றுளி, எ. சுப்ரமணியம், புரட்சிப் பாடகர் எச். வி. சீனிவாசன் கலா நிகழ்ச்சியை நடத்தினர்.

இராமநாதபுரம்: 10—10—52ல் கரிகாலன் தலைமையில் தோழர்கள் முகவை பாண்டியன், முகவை. இராச. பாண்டியன் பேசினர்.

சென்னை: 4வது வட்டக் கழகச் சார்பில் 12-10-52ல் அர்ச்சுனன் நினைவு நாள் த. சேதுராமன் தலைமையில் நடத்தப்பட்டபோது முத்தையா, சந்திரன், இராசு, இளந்தென்றல் பேசினர்.

காத்தான்குளம்: 10—10—52ல் திராவிட இளைஞர் முன்னேற்றக் கழகம் எஸ். பெருமாள் தலைமையில் துவக்கப்பட்டது. தோழர் குசைநாத், பேசினர்.

திருத்துறைப்பூண்டி: 7-10-52ல் இரா. சிவாஜி தலைமையில் நடைபெற்ற பிரிவினை நாள் கூட்டத்தில் செல்லத்துரை, இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., பேசினர்.

சாத்தூர்: 8—10—52ல் விருதை ந. ராமசாமி பேசினர். தோழர் இ. கிருஷ்ணன் இயக்கப்பாடல்கள் பாடினர்.

சிவகங்கை: 12-10-52ல் நடைபெற்ற தீபாவளி ஒழிப்பு தினக் கூட்டத்தில் டி. கே. சீனிவாசன், செங்குட்டுவன் பேசினர். சத்தியேந்திரன் தலைமை வகித்தார்.

நிலக்கோட்டை: 28—9—52ல் நடைபெற்ற கூட்டத்தில் பி. வடிவேல் தலைமையில் குறள்தாசன், இராசாராம், எம். ஆர். கணேசன், விருதை ராமசாமி பேசினர். எம். மருதமுத்து இயக்கப் பாடல் பாடினர்.

## 'அகிம்சைக்கு' அர்ப்பணம்!

அருப்புக்கோட்டை :— அக்: 26, இன்றிரவு நடைபெற்ற நெடும்பாவுக் கைத்தறி நெசவாளர் பொதுக் கூட்டத்தில் காங்கிரஸ்காரர்கள் புகுந்து கலவரம் செய்தார்கள், அருப்புக்கோட்டைமக்கள் தொகுதி உறுப்பினர் M.D. ராமசாமி, B.A. தலைமையில் மேற்படி கூட்டம் நடைபெற்றது. 1. நா. க. சண்முகவேலாயுதம் 2. த. அருணாசலம், 3. ச. கருப்புச்சாமி ஆகிய மூவரும் கம்புகளால் தாக்கப்பட்டு படுகாயம் அடைந்தனர். அண்மையில் நடைபெற்ற முனிசிபல் தேர்தலில் நெசவாளர்கள் கட்டுப்பாடாக காங்கிரசைமுறியடித்ததுதான் காரணம். 50,000 மக்கள் தொகையுள்ள அருப்புக்கோட்டையில் 30,000 பேர் கைத்தறி நெசவாளர்கள்.

*

மதுரை:— அக்; 25, ராஜாஜிவிளையாட்டு மைதானத்தில் மதுரை இளைஞர் காங்கிரஸ் சார்பில் நடத்தப்பட்ட மாரிமுத்து கலாநிகழ்ச்சியின்போது ரோடுகளிலும் வீடுகளிலுமிருந்த தி. மு. கழகத் தோழர்கள் பலரைத்தாக்கியதோடு கீழ்வெளி வீதியிலுள்ள முத்து படிப்பகத்திலுள்ள போர்டுகளை அகற்றி காலித்தனம் செய்தனர்.

*

அய்யங்கோட்டை (மதுரை) அக்; 10, கம்பீரமாகப் பறந்து கொண்டிருந்த தி. மு. கழகக் கொடியை, காங்கிரஸ் வெறித்தனம் இறக்கிவிட்டதோடு கொடிக்கம்பத்தையும் ரம்பங்கொண்டு அறுத்துப் போட்டுவிட்டனர்.

*

காங்கிரஸ் அகிம்சாமூர்த்திகளின் சமீபத்திய நிகழ்ச்சிகளில், சில இவை. இதுபோன்றே சென்னையைச் சேர்ந்த மேற்கு மாம்பலத்திலும் அண்மையில் நமது தோழர்கள் பலர் தாக்குண்டதாகவும் கேள்விப்படுகிறோம். (முழுவிபரம் கேட்டுள்ளோம்) இவ்விதம எதிர்க்கட்சியினரை தாக்கும் திருப்பணியில், காங்கிரஸ் இயக்கத்தார், அடிக்கடி ஈடுபடத்துவங்கியுள்ளார்கள். ஆட்சி தம்மிடம் உளது எனும்தைரியத்தால், அரசியல்வாழ்வு அநாகரீகமாவதை எவரும் அனுமதிக்கக் கூடாது. ஆனால், காங்கிரஸ் தலைவர்களோ இவ்வித சம்பவங்கள் நடைபெற்றால், அதுகண்டு வாய்மூடி மௌனிபாகவே இருந்துவிடுகின்றனர். இரண்டு வாரங்களுக்குமுன்பு (வ. ஆ.) வேலூரில் ஒரு எதிர்க்கட்சி கவுன்சிலரை, காங்கிரஸ் அம்புகள் கர்ணகடோரமாகத் தாக்கியிருக்கின்றனர்.

இவ்வித அலங்கோலங்கள் நடைபெறுவதை ஆளும் கட்சியினர், அனுமதிப்பது, நாட்டைக் காடாக்கும் திருப்பணிக்கே கொண்டு செல்லும். மனிதனாகப் பிறந்த எவருக்கும் கை, காலிருக்கிறது! விலை கொடுத்தால் கிடைக்க, கம்பும் கத்தியும் இருக்கிறது! கொஞ்சம் துணிவும்—கோபமும் வந்து விட்டால் எவனும் மிருகமாகிடலாம்! இத்தகைய மிருகத்தனத்தில், கொள்கைக்காகப் போராடும் அரசியல் வாழ்வினர் ஈடுபடுவதென்பது, நாணக்கூடிய காரியமாகும். ஆனால், அடிக்கடி நாட்டில் பல 'தேவீ' நிகழ்ச்சிகள் தொடர்ந்த வண்ணமேயுள்ளன. இந்த அநாகரீகச் செயலுக்கு ஆதரவளிக்கும் காங்கிரஸ் தலைவர்களின் போக்கைக் காண வருந்துகிறோம். இதுபோன்ற நடவடிக்கைகள், தடுக்கப் படாவிடில், மனிதர்கள் உலவார்! மிருகக் கூடாரமாக, நாடு ஆகிவிடும்!!—என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். அரசியலில், தடியும் கத்தியும் தலையிடக்கூடாது—அறிவும் கொள்கையுமே தலையிட வேண்டும். அந்த நாகரீகத்தையும், மறக்கும், நிலைக்கு காங்கிரஸ் கேடுற்றது காண, கத்தியையும் கம்பையும் எடுப்பதால் பயனளிக்காது. உணரவேண்டும், 'வெறி'க்கு இரையாவோர்.

*

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

வருணன் ஏதோ ஞாபகப் பிசகாயிருக்கலாம். அதைப் பிரமாதப் படுத்துகிறார்! வருணனின் தயவால், மழை இல்லையென்றாலும், பக்கத்து இடங்களிலிருந்து பொருள்களை வரவழைத்துக் கொள்ளலாம். அதைச் செய்வதில்லை! மக்களோ நம் மீது சீண்டிவிடுகிறார். நல்ல ராஜாங்கம் இல்லாததால் வேலையின்லாமலும், வருமானமின்றியும் வாடுகிறார்கள் மக்கள். அவர்களைப்போய் துன்புறுத்திக்கொண்டே யிருக்கிறார்! அண்மையில் திருப்பதிக்குப் போனாராம், 'ராஜகோபாலன்' எனும் திருப்பெயர் கொண்ட அந்த ஆசாமி. அங்கே போய் மக்களை வெங்கடாஜலபதிமீது சீறும்படிச் செய்திருக்கிறார்!

வி:- என்மீதா? என்ன துணிவு! என்ன அகங்காரம்!

நார:- மக்களோ பணமில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். 'கடவுளே, கண்ணில்லையா' என்று அழுது கொண்டிருக்கிறார்கள். அவர்களிடம்போய் அதிக வரி கேட்கிறார்! கேட்டு விட்டாவது போகட்டும். மக்கள் பாடு, இவர் பாடு. அதற்கு, நம் பெயரையும் ஏன் இழுக்கவேண்டும்? நாம்தான் வரி வசூலிக்கச் சொல்கிறோமாம், அவரை!

விஷ்ணு:- நாமா?

நா:- ஆம்! நாம்தான்!! "எங்களை வரி வசூலிக்குமாறு வெங்கடாஜலபதிதான் நியமித்திருக்கிறார். ஆகவே, நீங்கள், மறுக்காமல் கொடுங்கள்" என்று பேசியிருக்கிறார்!

வி:- அடப் பாவி! ஆபத்தான மனுஷனாக யிருக்கிறானே!!

பா:- அந்த ஆளும் நாஸ்திகனோ?

நார:- அல்ல பிரபு! அல்ல!! பஜகோவிந்தம் பாடுபவர்.

பா:- விந்தையாயிருக்கிறதே!

வி:- விந்தையா? வேதனை! விணாக, என் மானத்தை வாங்கும் துஷ்டனை என்ன செய்கிறேன் பாரும்! எங்கே, என் சக்கராயுதம்? கருடா, கிளம்பு! இலட்சுமி, இதோ வந்துவிடுகிறேன்!

[கோபத்தால் குதிக்கும் 'உள்நாட்டிலாகா' அமைச்சரை சாரனிலும் தடுக்கிறார். 'அமைதி! அமைதி!!' என்று கூவுகிறார். சபையில் குழப்பம். கலைகிறது]

### காட்சி 3

இடம்: தேவலோகப் பாதை

[இளங்கோவும் வள்ளுவரும் வந்துகொண்டிருக்கிறார்கள். மற்றோர் பக்கத்தில் புரந்தரதாஸ், ராமதாஸ், கபீர்தாஸ் ஆகியோர் 'ஜாலரா' 'தம்புரு' சகிதம் 'ராம ராம பஜோ' 'கிருஷ்ணா முகுந்தா முராரி!' என்று பஜனைசெய்தவண்ணம் பக்திப் பிரவாகத்தோடு, குதித்துக்கொண்டு வருகிறார்கள். வேடிக்கையாகப் பார்க்கிறார், வள்ளுவர்]

திரு:- பார்த்தீரா! இளங்கோ!

இள:- கண்டேன்.

திரு:- இந்தக் காட்சியை அல்ல நான் கேட்பது. திருச்சபையில் நடைபெற்றதை.

இள:- வேடிக்கையா யிருந்தது! இலட்சுமி, சரஸ்வதி, பிரம்மா, விஷ்ணு, ருத்திரன், வருணன். வாயு……இவ்விதமெல்லாம் வரிசை வரிசையாகக் கடவுள்களைக் காட்டிப் பேசினாரே நாரதர்! இத்தனைபேரிருந்தும் நமது தமிழகத்தில் வறுமையும் பசியும் கூத்தாடுவதாக பூமாதேவி கதறினாரே—விந்தையாயில்லை.

திரு:- விந்தை யொன்றுமில்லை! தமிழர் சிந்தை திரிந்ததன் விளைவு இது!

இள:- அப்பப்பா! எத்தனைக் கடவுள்கள்? ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு கடவுள்! ஆனால், கல்வியில்லை — செல்வமில்லை. கடவுள் கும்பல் இல்லாத நாடுகளில் கல்வியும் செல்வமும் கரைபுரள்கிறது! நம்மவரோ, நைந்து சாகின்றனர்!!

[வள்ளுவர், பதில் உரைக்காது மவுனமாயிருக்கிறார். சிறிது நேரம் கழித்து ஆவேசம் வந்தவர்போலக் கூவுகிறார். அப்போது இந்த வார்த்தைகள் ஒலிக்கின்றன]

திரு:-

"இரந்து உயிர் வாழவேண்டின்
பரந்து கெடுக இவ்வுலகியற்றியான்"

---

மேட்டூர் அணை: 20—10—52ல் க. கு. சின்னசாமி தலைமையில் ஈரோடு எஸ். அப்பாவு, ஈ. வி. கே. சம்பத் சொற்பொழிவாற்றினர்.

சென்னை: புதுப்பேட்டை தி. மு. க. ஆண்டுவிழா 19—10—52ல் மு. கலையழகன் தலைமையில் மு. கருணாநிதி, கண்ணதாசன் பேசினர். 'நான்சென்ஸ்' என்று கூறிய நேருவைக் கண்டித்து தீர்மானம் அனுப்பப்பட்டது.

சென்னை: 44வது வட்டம் தி. மு. க. கமிட்டியில் பண்டித நேருவின் 'நான்சென்ஸ்' பேச்சு குறித்து கண்டனத் தீர்மானம் செய்து அனுப்பி வைக்கப்பட்டது.

*

புதிய முகவரி: விருதை ந. இராமசாமி, கலா நிலையம் காந்திபுரம் தெரு, ஆஸ்டின் மார்க்கெட் வழி, விருதுநகர்.

*

### வானொலியில்

24-10-52 பிற்பகல் 1-மணிக்கு சென்னை வானொலியில் தோழியர் சத்தியவாணிமுத்து, 'வீரம் நமக்குத் தேவையா?' என்பது பற்றி பேசினார்.

## தஞ்சை மாவட்டம்

### செயலராளர் அறிக்கை

மாவட்டக் கழகத்திலிருந்து அனுப்பப்பட்ட கிளைக்கழகப் பதிவுச்சீட்டை பூர்த்தி செய்தும் இதுவரை அனுப்பாத தோழர்கள் உடனே அவைகளை பூர்த்தி செய்து அனுப்புவதுடன் தாங்கள் கொடுக்கவேண்டிய தொகைகளையும் ரசீது புத்தகங்களையும் உடனே மாவட்டக் கழகத்துக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். பதிவுச்சீட்டுகள் பூர்த்தி செய்து மாவட்டக் கழகத்துக்கு வந்து சேர்ந்தால்தான் மாவட்டப் பிரதிநிதிகளின் பெயர் மாவட்டக் கழகத்தில் பதிவு செய்யக்கூடும். பதிவுச்சீட்டும், பாக்கித்தொகையும் அனுப்பாத கிளைக்கழகங்களிலிருந்துவரும் பிரதிநிதிகள் தேர்தலில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்களென்பதையும் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாவட்டக் கழகத்தேர்தல் நடைபெறவிருக்கிறது. கிளைக் கழகத் தோழர்கள் உடனே பதிவுச் சீட்டுகளையும் பாக்கித் தொகையையும் என்னிடம் சேர்க்கும்படி மறுமுறையும் கேட்டுக்கொள்கிறேன்.

கே. கே. நீலமேகம்,
செயலாளர், த. மா. தி. மு. க.
பஞ்சக்காரத்தெரு,
கும்பகோணம்.

1-ம் பக்க தொடர்ச்சி

மகா:- நாரதா! இலட்சுமிக்குப் பதில் நான்தான் இருக்கிறேனே— நீ கண்டுவந்த பிரச்னைகளைக் கூறலாம். கூறு.

நார:- விந்தையான பதில்! வெட்கப்படுகிறேன். இலட்சுமி, நிதியமைச்சர் பதவி வகிப்பவர். அவருக்குப் பதில் தாம் இருப்பதாக, துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலன உள்நாட்டு அமைச்சர் கூறுகிறார். சபையோரே, கேளுங்கள்! இலட்சுமி, இவருடைய பத்தினி. பத்தினிக்காகப் பரிந்து பேசுகிறார் இவர். இதனால்தான் அப்போதே கூறினர்! உறவினர்களையே மந்திரி சபையில் அமர்த்த அனுமதிக்கக்கூடாதென்று.. யாரும் கேட்கவில்லை! இப்போது பாருங்கள்!! திருச்சபையை அவமதிக்கிறார், உள்நாட்டு மந்திரி. மனைவிக்காகப் பரிந்து வருகிறார் மகாவிஷ்ணு.

[நாரதன், பாணி புரியாமல் விஷ்ணு விழிக்கிறார். 'ஏனிந்த வம்பு?' என்ற தோரணையில் 'கருடனை'ப் பார்க்கிறார். — ஜாடையாக 'போய் அழைத்து வருக' என்கிறார்.]

விஷ்:- நாரதா! நீ கூறும் நிதிமந்திரி விரைவில் வந்துவிடுவாள்...... விஷயத்தைக் கூறு.

நார:- நிதிமந்திரி வருவது சரி.. கல்வி, மந்திரி?

பிர:- என் நாவிலேயே இருக்கிறாளே அவள்!

நார:- எங்கு வேண்டுமானாலும் இருக்கட்டும்—அவர். ஆனால், இப்போது சபையிலிருக்கவேண்டும்.

[சரஸ்வதியைக் கீழே தப்புகிறார், பிரமதேவன். நாமகள்; ஓர் ஆசனத்தில் அமரும் நேரத்தில் இலட்சுமியும் சபைக்கு வந்து அமருகிறார். நாரதர் தனது பேச்சைத் துவங்குகிறார்.]

நார:- சபையோரே! நான் கூறப்போகும் விஷயங்களை வேடிக்கையாக எண்ணக்கூடாது. போன முறை திருச்சபை கூடியபோதுசில முக்கிய விபரங்களைக் கூறினேன். திகைத்தீர்கள் நீங்கள். இப்போது அதைவிட திகைப்பான விஷயங்களைக்கண்டு வந்திருக்கிறேன். இதனை விளக்குமுன், போனதடவை நான் வெளியிட்ட விபரங்கள் குறித்து உங்களுக்கு கவனமூட்ட விரும்புகிறேன். முதலமைச்சர் அவர்களே! தயவுசெய்து பழைய விபரங்களை ஒரு சிறிது சபைக்கு; தங்களால் கவனமூட்ட முடியுமா?

பர:- எது? அந்த ஆஸ்தீக—நாஸ்தீக விஷயமா!

நார:- ஆம்! ஆஸ்தீகர்களின் நிலைகளைக்குறித்தும் நாஸ்தீகர்கள் வளர்வது சம்பந்தமாகவும்எச்சரித்தேன். இப்போது, பூலோகம் சென்று பார்த்தால் நிலைமை வேடிக்கையாக இருக்கிறது — வேதனையாயுமிருக்கிறது. நாஸ்தீகர்கள் நல்லவர்கள் போலக் காட்சி தருகிறார்கள் — அவர்கள் கூறுவதிலும் நியாயம் நிரம்பியதாகத் தென்படுகிறது — அவர்களைவிட நமது பக்தர்கள் என்று சொல்லிக்கொள்வோர்தான் மிக மிக ஆபத்தாகயிருக்கிறார்கள்.

விஷ்:- அப்படியா?

நார:- ஆமாம்! பூலோகத்துக்குச் சென்றதும், எனக்கோர் ஆசை வந்தது. அடிக்கடி அங்கேயிருக்கும் நாஸ்தீகர்கள் ரஷ்யா—அமெரிக்கா ஐரோப்பா ஆகிய பூமிகளையும் நம்மவரான இருபது கோடி மக்களின் நிலைமைகளையும் ஒப்பிட்டு ஒப்பிட்டுப் பேசுவதுண்டு. அதனால் அந்த இடங்களையும் பார்த்துவரலாமென்று சென்றிருந்தேன்...

பரம்:- எங்கே? ரஷ்யா — அமெரிக்கா—ஐரோப்பாவுக்கா!

நார:- ஆம்! அங்கேயெல்லாம் நமது ஜனங்களைப்போலப் பத்து மடங்கு இருக்கிறார்கள். நமக்குக் கட்டுப்பட்டோர் இந்துக்கள் எனப்படும் இருபது கோடி பேர்தானே! ஆனால் இயேசுநாதர் என்பவருக்கும், முகம்மதுநபி என்பவருக்கும் புத்தர் என்பவருக்கும் கட்டுப்பட்ட ஜனங்கள் ஏராளம் இருக்கிறார்கள். அவர்கள், நம்மவர்களைவிட பத்திசாலிகளாகயிருக்கிறார்கள். அங்கே கல்விக்குத் தெய்வம் சரஸ்வதி இல்லை! எனினும்: கல்வி ஏராளமாகப் பரவியிருக்கிறது. செல்வத்துக்குத் தெய்வம் இலட்சுமி கிடையாது!-ஆனால், ஏராளமான செல்வம் புரள்கிறது. அதுமட்டுமா? ஆகா! எவ்வளவு பெரிய அற்புதங்கள், தெரியுமா? வானத்தை வட்டமிட ஒரு இயந்திரம்! நீருக்குள் போக ஒரு இயந்திரம்! விதவிதமான ஆராய்ச்சிகள்! விசித்திரமான கருவிகள்! அதைக்கண்டபோது திகைத்துப்போனேன்.........

பரம்:- நம்மவர் எப்படி யிருக்கிறார்கள்?

நார:- சொன்னால்,வெட்கக்கேடு! பாகவதம், திருவிளையாடல் புராணம், நான்குவேதம் இவைகளைப் படித்துக்கொண்டும் படையல்கள் போட்டுக்கொண்டும், இதனால்வரும் சண்டைச்சச்சரவுகளை வளர்த்துக்கொண்டும் இருக்கிறார்கள். சரஸ்வதி பூஜை செய்யத் தவறுவதில்லை! ஆனால் படித்தோர் தொகை பரிதாபம். லட்சுமி படம் இல்லாத வீடு இடையாது! ஆனால், காசுக்கு அலைகிறார்கள்! அதுமட்டுமல்ல; இருபது கோடி இந்துக்கள் என்றால், அவர்களுக்குள்ளாகவே ஆயிரமாயிரம் பிரிவுகள் இருக்கின்றன. சண்டைகளும் உண்டு. மண்டைகள், உடைவதும் சகஜம்!

விஷ்:- இந்த விஷயங்களைத் தானே நாஸ்தீகர் என்போர் கண்டிப்பதாகச் சொன்னாய்?

நார:- ஆமாம், பிரபோ! இவைகளைத்தான் எடுத்துச் சொல்கிறார்கள். இதற்காகத்தான் கண்டிக்கவும் படுகிறார்கள்.........

பரம்:- சரி, ஆஸ்தீகர்களைவிட நாஸ்தீகர்கள் என அழைக்கப்படுவோர் நல்லவர்களாக இருக்கிறார்கள் என்றாயே. அது எவ்விதம்?

நார:- இதைப்பற்றி விளக்குமுன் கண்ணீரும் கம்பலையுமாய் இதோ அமர்ந்திருக்கும் பூமாதேவியின் மகஜரைக் கவனிக்கவேண்டுகிறேன். ஏனெனில் அவளது மகஜர், மிகமிக முக்கியமானதும், இந்த விஷயத்துக்கு விளக்கம் தரக்கூடியதாகவும் இருக்கும்.........

பரம்:- பூமா! உன்மகஜர் என்ன?

[தலைவிரிகோலமாய் எழுந்திருக்கும் பூமாதேவியின் மீது சபையோரின் கவனம் செல்லுகிறது. 'ச்சு! ச்சு!!' என்று ஒரு பக்கத்தில், பரிதாபம். கண்ணீரைத்துடைத்துக்கொள்கிறாள் பூமி. தழதழத்த குரலில்பேசுகிறாள்.]

பூமா:- மும்மூர்த்திகளே! கண்ணீரால் நனையும் எனது கதையைக் கவனமாகக் கேளுங்கள். 'பொறுமையின் பூஷணம்' என்று எனக்கு நீங்கள் புகழுரை சூட்டியதுண்டு. எனது பொறுமை யாவும் பொசுங்கிப்போய்விட்டது. என்மீது தவழும் மக்களைக்கண்டு மகிழ்ந்த காலம் மறைந்துவிட்டது! கோயில்கள், கூடகோபுரங்கள், மாளிகைகள் யாவையும் சுமக்கப்பின்வாங்கவில்லை நான். ஆனால் அவைகள் தரும் பளுவைவிட இப்போது அதிகப்பளுவைத் தாங்கவேண்டியவளாகி விட்டேன். விநாடிக்கு விநாடி எனக்குள் புதைக்கப்படும் பிணங்கள் ஏராளம்! என்மீது உயிரற்று விழுந்து அழுகினாலும் உயிர்கள் இலட்சோப இலட்சம்! தினசரி, நமது மக்களில், ஆயிரக்கணக்கான பேர் 'அபயம்! அபயம்!!' என்று என்னிடம் அடைக்கலம் புகுகிறார்கள். இந்த கண்ராவிக் காட்சியை எப்படிச் சகிப்பது நான்? பசி! பசி!! என்று அலைகிறார்கள். புசிக்க உணவில்லை! —என்று கதறுகிறார்கள். சுருண்டு விழுகிறார்கள்! இந்த சோகத்தை எவ்விதம் நான் வர்ணிக்கமுடியும்? வார்த்தைகளால் கூறமுடியவில்லை, என்னால்! ஒரு முறை நீங்கள் வந்துபாருங்கள். இந்தக் கஷ்டத்தை என்னாலசகிக்க, இனியும் இயலாது. எனது 'ராஜினமா'வை ஏற்றுக்கொண்டு என்னை விடுவியுங்கள். பொறுத்தது, போதும்! இனிப் பொறுக்கமுடியாது!!

[ஓ, வென்று அலறுகிறாள். திருவள்ளுவரும் இளங்கோவும் ஒருவரையொருவர் சோகத்தோடு பார்க்கின்றனர். சபையில் கொஞ்சம் சலசலப்பு.]

விஷ்:- பூமகளே! இவ்விதம் மக்கள் செத்துமடிவதற்குக் காரணம்?

பூ:- பஞ்சம், பிரபோ, பஞ்சம்!

விஷ்:- சோலைகளும், வயல்களும் உன்னிடம் இருக்கிறதே! இன்றும், பக்தர்கள், நமக்குப் படையல்மூலம் அனுப்பும் பொருள்களில் எவ்விதக் குறைவுமில்லையே. தேர்விழா, திருவிழா, ஆறுகாலபூஜை, அவை யாவிலும் குறைதென்படவில்லையே! வைரமுடியும், கும்பாபிஷேகமும் வழக்கம்போலத்தானே செய்யப்படுகிறது.

பூ:- ஆமாம், பிரபு! அவைகளைத் தங்களுக்கு 'லஞ்சமாகத்' தருகிறார்கள்—பக்தர்கள்.

பர:- லஞ்சமா?

பூ:- ஆம்! அதனால்தான் நீங்கள் பூலோகத்தைக்குறித்து கவலைப்படவில்லைபோலும். காணிக்கை-கடவுள் பஜனை—திருமஞ்சன உத்சவம் — நைவேத்ய வைபவம்—வேதபாராயணம், இவைகளுக்குக் குறைச்சலில்லை. ஆனால் வெந்து மடிவோரும் வேதனையால் சாவோரும் அதிகம்! மிக மிக அதிகம்!!

பர:- நாரதா! நீ போய், வந்ததாகச் சொன்னாயே, இயேசுவின் நாடு, முகம்மதுநபியின் இடம், அங்கும் உண்டா இந்த நிலை?

நார:- அதுதான் பிரபு, வேதனை! அங்கெல்லாம் இவ்வளவு கொடுமை இல்லை. சுகமாக வாழ்கிறார்கள் — படையலும் பாராயணமும்செய்யும் நம்மவர்தான் கஷ்டப்படுகிறார்கள்.

பர:- அங்கு வளமையான வாழ்வும், இங்கு, வறுமையும் இருப்பதேன்?

நார:- அங்கே நமது பக்தகுழாம் இல்லை! இங்கே அவ்விதம் சொல்லிக்கொள்வோர் இருக்கிறார்கள்!! அங்கே நல்ல அரசாங்கம் இருக்கிறது. இங்கே நம்முடைய பக்தர்கள் நடத்தும் அரசாங்கம் இருக்கிறது.

விஷ்:- பக்தர்கள், இந்த நிலைமையைக் கவனிப்பதில்லையா? மக்கள் குமுறலைத் தடுக்க எவ்வித நடவடிக்கையும் எடுப்பதில்லையா? அது தானே, அவர்கள் பொறுப்பு.

நார:- ஆமாம், பிரபோ, ஆமாம்! ஆனால், எல்லாப் பொறுப்புகளையும் இங்கே போடுகிறார்கள். எதைக் கேட்டாலும், 'ஈசன் செயல்' என்று சொல்லிவிடுகிறார்கள்!!

விஷ்:- அப்படியா?

நார:- அதுமட்டுமல்ல. நாஸ்திகாளையும் மிஞ்சிப் பேசுகிறார்கள்! நாஸ்தீகராவது—"வீணாக ஏன் அலைகிறாய்? கடவுளை நினைத்து உன் வாழ்வைப் பாழாக்கிக்கொள்ளாதே! ஒன்றே குலம்—ஒருவனே தேவன். உனக்கேன் இதில் வம்பு? உன் வேலையைப் பார்! உன் உழைப்புத் தான் உனக்கு ஊதியம் தரும்" என்று போதிக்கிறார்கள். ஆனால், நமது பக்தர்கள் அப்படியில்லை பிரபு! நம்மை மிகமிக ஆபத்தில் வைத்துக்கொண்டிருக்கிறார்கள்! எதைக் கேட்டாலும், 'ஈசன் செயல்' என்று கூறிவிடுகிறார்கள்! அதனால்தான். இங்கு, நான் அவசரமாக வந்தேன்.. "இவ்வளவு கஷ்டப்படுகிறோம்—கஷ்டத்துக்கிடையில் கடவுளுக்குப் படைக்கிறோம். ஆனால். கடவுள் கருணையே புரியமாட்டேனென்கிறார்" என்று ஏழைகள், முன்பே தம்மை நொந்து கொள்வதாகக் குறிப்பிட்டிருக்கிறேன், தங்களிடம். அத்தகைய மக்களை நம்மீது கோபம்கொள்ளுமாறு தூண்டுகிறார்கள், பக்தர்கள்!

பிரமன்:- பக்தர்கள் அவ்விதம் செய்யமாட்டார்களே!

நார:- செய்யமாட்டார்களா?..... வேண்டுமானால் நீரே வந்து பாரும்! கண்ணால் கண்டது பொய்-காதால் கேட்பது மெய்யோ? நீரெல்லாம் இப்படிப் பேசுவதால்தான் 'வேத பாராயணக் கோஷத்தைக் கேட்டுக் கேட்டு கடவுள் காது செவிடாகி விட்டது' என்று பேசுகிறார்கள், நாஸ்தீகர்கள்...

பரம:- நாரதா! கோபம் கொள்ளாதே. விஷயத்தை விளக்கு. பக்தர்கள் எவ்விதம் மக்களைத் தூண்டிவிடுகிறார்கள்?

நார:- பிரபோ! செல்வத்துக்குக் கடவுள் யார்?

பர:- இலட்சுமி!

நார:- கல்விக்குக் கடவுள்?

பர:- சரஸ்வதி!

நார:- தண்ணீரின் அதிபதி?

பர:- வருணன்!

நார:. இவ்விதம் மக்களுக்குத் தேவையான ஒவ்வொன்றுக்கும் கடவுளர்கள் இருக்கிறார்கள், இல்லையா?

பர:- ஆமாம்!

நார:- பூலோகத்தில் ஒவ்வொரு இலாகாவுக்கும் மந்திரிகள் இருப்பதுபோல இருக்கிறார்கள். ஆனால், எதுவும், நமது பக்தர் வாழும் நாட்டில் பரவவில்லையே! ஏன்?

[திருவள்ளுவரின் கண்களில், புது ஒளி! இளங்கோவை ஏறிட்டுப் பார்க்கிறார். விஷ்ணுவின் முகத்தில் விகாரம் அரும்புகிறது]

விஷ்:- நாரதா! நீயும் நாஸ்தீகனாகிவிட்டாயா?

நார:- இல்லை பிரபோ! அவ்விதம் கேட்குமாறு மக்கள் உள்ளத்தைத் தூண்டினால் மக்கள் மனது எரிமலையாகத்தானே ஆகும்?

பர:- உண்மைதான்.

நார:- அத்தகைய கைங்கரியத்தைச் செய்கிறார்கள், நமது பக்தர்கள். அதிலும் இப்போது, ஆச்சாரியார் என்று ஒரு ஆசாமியிருக்கிறார். வைணவ குலம். பஜகோவிந்தப் பாராயணம் செய்யத் தவறுவதில்லை. சென்னை ராஜாங்கத்துக்கு அதிபதி. அந்த ஆள் செய்வது, மகா அக்கிரமமாயிருக்கிறது! எதற்கெடுத்தாலும் நம்மை இழுத்துவிடுகிறார்.

பர:- ராஜாங்கப் பொறுப்பை யேற்றவன் நம்மை ஏன் இழுக்க வேண்டும். உலகத்தில் நாம் தந்திருக்கும் வசதிகளை வைத்துக் கொண்டு மக்களைக் காப்பாற்றுவது தானே அவனது கடமை...

பூமா:- அதுதானே நடைபெறவில்லை, பிரபு!

பரம:- அப்படியா?

நார:- அதுமட்டுமா? நாம் தந்தவற்றை ஒழுங்காகப் பாதுகாக்கத் தெரியவில்லை! அதாவது போகட்டும். அதற்கு, பழியையும் நம்மீது போடுவதா? மக்களை நாஸ்தீகர்களாக்குவதா! கேளுங்கள், கதையை.

(-5ம் பக்கம் பார்க்க)

Editea Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 95, Tirukkachinambi St., Kancheepuram.